தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாளை கனமழைக்கு வாய்ப்பு: விவசாயிகளுக்கு வேளாண் துறை முன்னறிவிப்பு

மதுரை மாவட்டத்தில் வியாழக்கிழமை கனமழை பெய்யக் கூடும் என்பதால், விவசாயிகளுக்கு வேளாண் துறையால் முன்னறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியது: மதுரை மாவட்டத்தில் வியாழக்கிழமை (நவ.13) கனமழை பெய்யக்கூடும் என வானிலை முன்னறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆகவே, விவசாயிகளுக்கு முன்னெச்சரிக்கை அறிவிப்பு வெளியிட வேளாண் துறை இயக்குநரகத்தில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய விவசாயிகள் வயல்களில் தண்ணீரைத் தேக்கி வைக்கவோ, உரம் இடவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்போதைய நிலவரப்படி, மாவட்டத்தில் 25 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. நெல் வயல்களில் தான் அதிகளவு தண்ணீர் தேக்கி வைக்கப்படும் என்பதால் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு முன்னறிவுப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுதானியங்கள் உற்பத்தி ஆலோசகர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

மாவட்டத்தில் சிறுதானியங்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மேலாண்மைக் குழுவுக்கு தாற்காலிக அடிப்படையில் ஆலோசகர் நியமிக்கப்பட இருப்பதால், தகுதியானவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்டத்தில் நடப்பாண்டில்(2014-15) வேளாண்மைத் துறையில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்(சிறுதானியங்கள் உற்பத்தி) செயல்படுத்தப்பட உள்ளது. சோளம், ராகி, மக்காச்சோளம் போன்ற தானிய பயிர்களில் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கதில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில் இத்திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்த திட்ட மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு தாற்காலிக அடிப்படையில் ஒரு ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளார். வேளாண்மையில் அடிப்படை பட்டத்துடன் முதுகலை பட்டம் பெற்று பயிர் சாகுபடியில் 10 ஆண்டுகள் களப்பணியாற்றிய அனுபவம், ஊக்குவிப்புத் திறன், குழுத் தலைமைப் பண்புள்ளவரை தாற்காலி அடிப்படையில் ஆலோசகராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தகுதியானவர்கள், தங்களது முழுவிவரங்களுடன் கூடிய விண்ணப்பத்தை வரும் 25 ஆம் தேதிக்குள் வேளாண்மை இணை இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருதுநகர்: மேற்கு தொடர்ச்சி மலையில் நீர் குட்டைகள் அமைக்க ரூ.20 லட்சம் ஒதுக்கீடு

விருதுநகர் மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலை அடிவார பகுதிகளில் மழைக்காலங்களில் நீர் ஆதாரத்தை சேமித்து வைக்கும் வகையில் 10 இடங்களில் பெரிய அளவிலான தண்ணீர் குட்டைகள் அமைக்கும் பணியை வனத்துறை மூலம் மேற்கொள்ள ரூ.20 லட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் பசுமையாக்கும் வகையில் மரக்கன்றுகள் வைக்கும் திட்டம், வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் புகுவதை தடுப்பதற்கு அகழி அமைக்கும் திட்டம்,

தண்ணீர் தொட்டிகள் அமைக்கும் திட்டம் ஆகியவை வனத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, மலைப்பகுதிகளில் வடகிழக்கு பருவமழை அவ்வப்போது பரவலாக பெய்து வருவதால் ஓடைகளிலும், மலையடிவாரப் பகுதிகளிலும் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு மலைப்பகுதி அடிவார ஓடைகளில் ஓடும் வெள்ளநீரை தடுத்து தண்ணீர் குட்டைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தக் குட்டைகள் ஓடைப்பகுதியில் அகலமான இடமாகவும் சுற்றிலும் தடுப்பதற்கு போதுமான வசதியுள்ள இடங்களின் தன்மைக்கு ஏற்ப அமைக்கப்பட இருக்கிறது. இதுபோன்றவைகளை கருத்திற்கு கொண்டு மழைக்காலங்களில் ஓடைகளில் அதிக நீரோட்டம் உள்ள பகுதிகளில் தண்ணீர் குட்டைகள் அமைக்கப்பட இருக்கிறது. அந்த வகையில் சாத்தூர், தாணிப்பாறை, செண்பகத்தோப்பு, சாஸ்தாகோவில், அழகர்கோவில் அணை பகுதிகளுக்கு இடையே குறிப்பிட்ட 10 இடங்களில் தலா ரூ.2 லட்சத்தில் இக்குட்டைகள் அமைக்கப்பட இருக்கிறது. இது குறித்து வனத்துறை பாதுகாவலர் ஒருவர் கூறுகையில், குறிப்பிட்ட பகுதிகளில் நீர்வரத்து ஒடைகளில் அகலமான சமவெளி பரப்புடன் கூடிய இடங்களில் தண்ணீர் குட்டைகள் அமைக்கப்படுகிறது. இக்குறிப்பிட்ட இடங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவரும், அதிகமான தண்ணீர் தேங்கி தடுப்புச்சுவர் வழியாக வெளியேறும் வகையில் கற்கள் மற்றும் மண் ஆகியவை மூலம் இருபுறமும் 10500 மீட்டர் வரையில் கரைகள் பலப்படுத்தப்பட இருக்கிறது. இக்குட்டைகள் அமைப்பதால் குறிப்பிட்ட இடங்கள் நீர்ப்பிடிப்பு பகுதிகளாக மாறும். அதனால் அப்பகுதியில் உள்ள மரங்கள் அனைத்திற்கும் ஈரப்பதம் ஏற்பட்டு பசுமையாக மாறும். இதனால், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ள வன விலங்குகளும் தண்ணீர் மற்றும் இரைகளைத் தேடி காட்டுப் பகுதியில் புகுந்து விளைநிலங்களை சேதப்படுத்துவதும் குறையும். மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இடங்கள் தேர்வு செய்யப்

பட்டுள்ளதாகவும், விரைவில் பணி தொடங்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**<u>முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 139 அடியைத் தாண்டியது</u>**



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 139 அடியைத் தாண்டியது. 152 அடி உயரமுள்ள முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி 139.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1,049 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் விநாடிக்கு 456 கனஅடியாகவும் இருந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 6,849 மில்லியன் கனஅடியாக உள்ளது. இரண்டு நாள்களில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டிவிடும் என்றும், அணையிலிருந்து தமிழகத்துக்கு குறைந்த அளவாக 456 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்துவிடப்பட்டால் ஒரு வாரத்தில் 142 அடியை எட்டுவிடும் என்றும், தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். **வைகை அணையில்...** அதேநேரத்தில், 71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் தற்போது 52.59 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 495 கனஅடியாக உள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 1,760 கனஅடி தண்ணீர் வெளியேற்றப் படுகிறது. அணையின் மொத்த நீர் இருப்பு 2,351 மில்லியன் கன அடியாக உள்ளது. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 56.90 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 89 கன அடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் விநாடிக்கு 89 கன அடியாகவும்

இருந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 474.76 மில்லியன் கன அடியாக உள்ளது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 60 கன அடியாகவும், அணையிலிருந்து விநாடிக்கு 360 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. அணையின் மொத்த நீர் இருப்பு 100 மில்லியன் கன அடியாக உள்ளது. மழை அளவு மில்லி மீட்டரில்: பெரியாறு 2.4 மி.மீ., தேக்கடி 8 மி.மீ., சண்முகா அணை 2 மி.மீ., வீரபாண்டி 8 மி.மீ., மஞ்சளாறு 46 மி.மீ., சோத்துப்பாறை 10 மி.மீ., கொடைக்கானல் 9.8 மி.மீ.

## கூடுதல் மகசூல் பெற்ற விவசாயிக்கு விருது

திண்டுக்கல் நத்தம் வேளாண்மைத் துறை சார்பில், வட்டார அளவில் வேளாண்மைத் தொழில்நுட்ப முகமைத் திட்டத்தின் கீழ், 2013-14ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிக்கான விருதை, நத்தம் வட்டாரத்தில் முளையூரைச் சேர்ந்த சின்னையா என்ற விவசாயிக்கு வழங்கப்பட்டது.
இவர், நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையில், திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளில் அதிக மகசூல் பெற்றவர். இதன்மூலம், ஏக்கருக்கு 4,345 கிலோ கிராம் நெல் அறுவடை செய்துள்ளார். இவருக்கு, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் விருதை வழங்கினார். இதில், வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கரன், வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி, வேளாண்மை அலுவலர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை, வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைப் பணியாளர்கள் ராஜாங்கம், ராஜா, குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

## சிறுதானியங்கள் உற்பத்தி ஆலோசகர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

சிறுதானியங்கள் உற்பத்தி ஆலோசகர் பணிக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: திருப்பூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் (2014-15) வேளாண்மைத் துறையில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (சிறுதானியங்கள் உற்பத்தி) செயல்படுத்தப்பட உள்ளது. சோளம், ராகி, மக்காச்சோளம் போன்ற தானியப் பயிர்களில் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. மாவட்ட அளவில் இத்திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்த திட்ட மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு தாற்காலிக அடிப்படையில் ஒரு ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளார். வேளாண்மையில் அடிப்படை பட்டத்துடன் முதுகலை பட்டம் பெற்று, பயிர் சாகுபடியில் 10 ஆண்டுகள் களப்பணியாற்றிய அனுபவம், ஊக்குவிப்புத் திறன், குழுத் தலைமைப் பண்புள்ளவரை தாற்காலி அடிப்படையில் ஆலோசகராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தகுதியானவர்கள், தங்களது முழு விவரங்களுடன் கூடிய விண்ணப்பத்தை வரும் 25- ஆம் தேதிக்குள் வேளாண்மை இணை இயக்குநருக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக் கலைத் துறையின் மானிய திட்டங்களை பயன்படுத்த அழைப்பு

நீலகிரி மாவட்டத்தில், தோட்டக் கலைத் துறையின் மானியத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளதாவது: நீலகிரி

மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறையின் மூலமாக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இதில், காய்கறி சாகுபடியை மேம்படுத்தும் வகையில் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு விதைகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்கப் படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் விதைகளை பெற விவசாயக் குழுக்களை சேர்ந்த விவசாயிகள் ஒரு ஹெக்டேர் வரையிலான பரப்பிற்கு நில ஆவணங்கள், குடும்ப அட்டை நகலினை வழங்கி ரூ. 10,000 வரை மானியம் பெற்றுக் கொள்ளலாம்.மேலும், 50 சதவீத மானியத்தில் 340 ஆயில் என்ஜின்கள் ரூ. 54.4 லட்சம் மானியத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கு நில ஆவணங்கள், குடும்ப அட்டை நகல், புகைப்படம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். இதில் அதிகபட்சமாக ரூ. 16,000 வரை மானியம் வழங்கப்படும். சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் 200 விசைத் தெளிப்பான்கள் மற்றும் 400 கைத்தெளிப்பான்கள் ரூ. 14 லட்சம் மானியத்தில் வழங்கப்படவுள்ளன. அதிகபட்சமாக விசைத் தெளிப்பானுக்கு ரூ. 4000, கைத்தெளிப்பான்களுக்கு ரூ. 1,500 மானியமாக வழங்கப்படவுள்ளன. இத்தகைய இடுபொருள்களை மானியத்தில் பெற நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இந்த மானியத் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளார்.

## "சான்று பெற்ற விதைகளை சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம்'

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் நெல் மற்றும் பயறு சாகுபடியில் விதைச்சான்று பெற்ற விதைகளை சாகுபடி செய்து கூடுதல்

மகசூல் பெறலாம் என்றார் கோவை தமிழ்நாடு அரசு விதைச்சான்று துறை இயக்குநர் அலுவலக இணை இயக்குநர் பி. பழனிச்சாமி. திருவாரூர் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்ட போது மேலும் அவர் கூறியது: வேளாண் துறை விவசாயிகளுக்கு விதைகளை வழங்குகிறது. ஆனால், அந்த விதைகள் தரமானதா என்பதை ஆய்வு செய்து விதைச் சான்று வழங்குவது விதைச்சான்று துறை. அரசு, விவசாயிகளிடமிருந்து, தனியாரிடமிருந்து நெல் மற்றும் பயறு வகைகளை வாங்கி விதைநேர்த்தி செய்து, அதற்கு தரச்சான்றிதழ் வழங்குகிறது. ஆய்வில், விதையின் முளைப்புத் திறன் எப்படி உள்ளது, இனத்தூய்மை (கலவை விதை) சரியாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கப்படும். திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி பகுதியிலுள்ள விதைப் பண்ணை வயல்கள் ஆய்வு செய்யப்பட்டது. திருவாரூர் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலக பணியாளர்களிடம், விதைச் சான்று நடைமுறைகளை செயல்படுத்தும்போது, விதை தரத்தில் எவ்வித சமாதானமும் செய்துகொள்ளக் கூடாது. உற்பத்தியாளர்களுக்கு இடையூறு ஏதுமின்றி சான்றளிப்பு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற அரசின் சான்று பெற்ற விதைகளை சாகுபடி செய்து பயன்பெற வேண்டும் என்றார் அவர். ஆய்வின் போது, திருவாரூர் விதைச்சான்று உதவி இயக்குநர் பி. கல்யாணசுந்தரம், விதைச்சான்று அலுவலர்கள் ஆர். சுவாமிநாதன், டேவிட், கோபி, ராஜகுரு ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 1,440 விவசாயிகளுக்கு வங்கி கடன்

வாலாஜாபாத்: காஞ்சிபுரம் கனரா வங்கி சார்பில், விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம் நேற்று நடந்தது. ராஜகுளம் கிராமத்தில் நடந்த முகாமிற்கு, இலுப்பப்பட்டு ஊராட்சி தலைவர் ரோஸ் கண்ணன் தலைமை தாங்கினார். சென்னை கனரா வங்கி மண்டல அலுவலர், கிருஷ்ணகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, விவசாயம், பால் உற்பத்தியாளர் சங்கம், மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உட்பட, 1,440 பேருக்கு, 3.40 கோடி ரூபாய்க்கான குறுகிய கால பயிர் கடன் ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் காஞ்சிபுரம், திருப்புலிவனம், நத்தகொல்லை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த கடன் பெறும் பயனாளிகள் கலந்து கொண்டனர். காஞ்சிபுரம் கனரா வங்கி முதன்மை மேலாளர் தனபால் வரவேற்றார். சென்னை கனரா வங்கி மண்டல மேலாளர் விக்னேஷ் நன்றி கூறினார்.

## 265 கால்நடைகளுக்கு சிகிச்சை

திருத்தணி: இலவச கால்நடை மருத்துவ முகாமில், 265 கால்நடைகளுக்கு, சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. திருத்தணி சிண்டிகேட் வங்கி மற்றும் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், திருத்தணி ஒன்றியம், பட்டாபிராமபுரம் கிராமத்தில், கால்நடை மருத்துவ முகாம் நேற்று நடந்தது.

முகாமை, சிண்டிகேட் வங்கி மேலாளர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார். இதில், கால்நடை மருத்துவர் நாகபூஷணி தலைமையில், மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு, 80 மாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், மலட்டுத்தன்மை நீக்கம், சினை பரிசோதனை, 160 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 25 கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது.

## லாபம் தரும் கீரை விவசாயம்



விவசாயத்தில் நெல், சோளம், கரும்பு போன்றவை இருந்தாலும், காய்கறிகளும் தவிர்க்க முடியாதது. சிறுவர்கள், கர்ப்பிணி பெண்கள் உட்பட அனைவருக்கும் தேவையான சத்தான உணவாக கீரை உள்ளது. இவை ஏழை முதல் பணக்காரர்கள் வரை எளிதில் வாங்கும் வகையில் மலிவான விலைகளில் கிடைக்கிறது. இதனால் கீரைகள், வீடுகளில் உணவு வகைகளில் தற்போது தவறாமல் இடம் பிடிக்கிறது. இதை விவசாயம் செய்பவர்களின் எண்ணிக்கையும் மிக குறைவு. தொடர் வறட்சியால் கண்மாய்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் பலர் விவசாயம் செய்வதையே விட்டு விட்டு வேறு வேலைக்கு சென்று விடுகின்றனர். 25 ஆண்டு காலமாக கீரை விவசாயத்தில் சாதனை படைத்து வருகின்றனர். விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அத்திக்குளத்தை சேர்ந்த குடும்பத்தினர். பவுன் ராஜன் கூறியதாவது," எனது தந்தை காலம் முதல் கீரை விவசாயம் செய்து வருகிறோம். அரைக்கீரை, பொன்னாங்கன்னி, பசலிக்கீரை, பாலக்கீரை போன்றவைகளை விவசாயம் செய்கிறோம்.

அரைக்கீரையை 25 சென்டில் விதைத்துள்ளேன். 12 நாளுக்கு ஒரு முறை 30 கிலோ முதல் 40 கிலோ வரை கிடைக்கும். பொன்னாங்கண்ணி கீரையை மாதத்திற்கு ஒரு அறுவடை செய்கிறோம். ஒரு முறை விதைத்தால் ஆண்டுக்கு 500 கிலோ வரை கீரை கிடைக்கும். சிவகாசி, ராஜபாளையம் வியாபாரிகள் கிலோ 15 ரூபாய்க்கு வாங்கி செல்கின்றனர். மழை இல்லாததால் கிணற்றில் இருக்கும் சிறிதளவு நீரை கொண்டு விவசாயம் செய்வதால், விவசாயம் செய்யும் பரப்பை குறைத்துள்ளோம். கீரை வளர்ப்பிற்கு மாடு, ஆடு சாணம், ரசாயன உரங்களை பயன்படுத்துகிறோம். விவசாயத்தில் எங்களது குடும்பத்தினர் அனைவரும் ஈடுபட்டு வருவதால் அதிக செலவில்லாமல், நல்ல வரு மானம் கிடைக்கிறது. மிகவும் சத்துள்ள இந்த கீரை விவசாயத்திற்கு தோட்டக்கலைத்துறை சார்பில் எவ்வித மானியம் இல்லாதது வேதனையளிக்கிறது ," என்றார். இவரை 93624 44948 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். ஸ்ரீவில்லிபுத்தூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மாரிமுத்து,"" கீரைக்கு ஆண்டு முழுவதும் மார்க்கெட் உண்டு. நல்ல விலையும் கிடைக்கிறது. கீரை பாத்திகளின் மேல் பச்சை வலைகளை போட்டு பராமரித்தால் வறட்சியிலும் நல்ல மகசூல் கிடைக்கும்," என்றார். **- ஆர்.வி.ராமநாதன், ஸ்ரீவில்லிபுத்தூர்**

**<u>சின்ன சின்ன செய்திகள்</u>**



**மண்ணின் கரிமப்பொருட்களால் விளையும் பயன்கள் :** மண்ணின் துகள்கள் வடிவமைப்பை மேம்படுத்தி துகள் இடைவெளியை அதிகப்படுத்துகின்றன. இதனால் நீர்பிடிப்பு தன்மையும் நல்ல காற்று பரிமாற்றமும் ஏற்படும். தழை, மணி, கந்தகம், நுண்ணூட்டங்கள் முதலியன மக்கும் பொழுது பயிருக்கு கிடைக்கின்றன. கரிம மூலக்கூறுகளின் இழுப்பு விசையால் நேர், எதிர் விசை பயிர்ச்சத்துக்கள் கரிமக்கூறுகளின் பரப்பில் பிடித்து வைத்துக்

கொள்ளப்படுகின்றன. இதனால் வேருக்கு கீழ் வடியும் நீரில் அவை அடித்துச் செல்லாமல் தடுக்கின்றன. மண்ணின் கரிம அயனிகள் பரிமாறும் நிலையை அதிகரிக்கின்றன. அதனால் ஆலை உரங்களை மண்ணிலிடும் போது அவற்றோடு கூட்டுச் சேர்ந்து உர உபயோகத்திறனை அதிகரித்துப் பயிர் விளைச்சலையும் அதிகரிக்கிறது. மண்ணின் கரிமம் அதிகரிக்கும் பொழுது மண் இயல்பு, அடர்த்தி குறைகிறது. இதனால் மண்ணை உழுவது முதல், விதை முளைப்பு, பயிர் வளர்ச்சி, நீர்ப்பிடிப்பு முதலியன எளிதாகின்றன. மண்ணின் கரிம அளவை 1 சத்திலிருந்து 2 சதம் வரை அதிகரித்தால் மண் அரிமானத்தை 5 மடங்கு வரை குறைக்கலாம். மண்ணில் எருவை அதிகம் இட்டு சாகுபடி செய்வதால் மண்ணை உழாமலேயே பயிரிட முடியும். மேலும் உரங்களையும், எருவையும் சேர்த்து மண்ணிலிட்டு தொடர்ந்து பயிரிட்டு வரும்போது உயர் விளைச்சலை பெறுவதோடல்லாமல் என்றென்றும் குறையாத மண் வளத்தை பெற முடியும். **TNAU பருத்தி பிளஸ் :** பருத்திக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர் ஏக்கருக்கு 2.5 கிலோ தேவைப்படும். பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 200 லிட்டர் திரவம் தேவைப்படும் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்துக் கொள்ள வேண்டும். பருத்தி பிளஸ் தெளிப்பதால் பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும். காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது. விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கிறது. வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கிறது. தகவல் : வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104. சின்ன வெங்காயத்தில் விதை உற்பத்தி நுட்பம் : கோ.5 வெங்காயத்தை நவம்பர் மாதம் நடவு செய்ய வேண்டும். தொழுஉரம் (மக்கியது) ஏக்கருக்கு 40 வண்டி போட வேண்டும்.

அத்துடன் வேப்பம் பிண்ணாக்கு 50 கிலோ, அசோஸ்பைரில்லம், 4 கிலோ பாஸ்போ பேக்டீரியா, 3 கிலோ நன்கு மக்கிய குப்பையுடன் கலந்து போட வேண்டும். பயிர் வளர்ந்து வரும் நிலையில் தக்க பயிர்பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். நடவு செய்த வெங்காயம் நட்ட 30-35 நாளில் பூக்க ஆரம்பிக்கும். பூ வந்தவுடன் நாப்தலின் அசிடிக் அமிலத்தை தெளிக்க வேண்டும். அதாவது 100 மில்லி கிராமை, 100 லிட்டர் நீரில் கரைத்தால் 100 பிபிஎம் வரும். இதனைத் தெளிப்பதால் தரமான விதை கிடைக்கும். விதை உற்பத்தியும் அதிகரிக்கும். விதைகள் கருப்பாக இருக்கும். விதைகள் முற்றியவுடன் கருப்பு விதைகள் வெளியே தெரியும். தக்க பருவத்தில் பூங்கொத்துக்களை வெட்டி எடுக்க வேண்டும். இலைமேல் விதைகள் காய்ந்து சிதறிவிடும். ஒரே நேரத்தில் எல்லா பூங்கொத்துக்களையும் வெட்டி எடுக்கக் கூடாது. விதை முற்றிக் கருப்பு விதைகள் வெளியே தெரியும் தருணத்தில் தான் வெட்டி எடுக்க வேண்டும். இரண்டு மூன்று முறை முற்ற முற்ற எடுக்க வேண்டும். அறுவடை செய்த பூங்கொத்துக்களை வெயிலில் நன்கு உலர வைத்து விதைகளை பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை பிஎஸ்எஸ் 12x12மி என்ற அளவில் துளைகள் உள்ள சல்லடையில் சலிக்க வேண்டும். சல்லடையில் நிற்கும் விதைகளைத்தான் பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 200 - 250 கிலோ விதை கிடைக்கும். விதைக்கு நல்ல விலையும் கிடைக்கும். விதையை சேமித்து வைக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் பவிஸ்டின் மருந்தை கலந்து விடவும்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>ரூ. 70 லட்சம் மஞ்சள் ஏலம்</u>

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம்

நடந்தது. நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,346 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 8,529க்கும், குறைந்த பட்சம், 6,609 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,899க்கும், குறைந்த பட்சம், 5,369 ரூபாய்க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 14 ஆயிரத்து, 222க்கும், குறைந்த பட்சம், 10 ஆயிரத்து, 899 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

நாமக்கல் : "கறவை மாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, நோய்தடுப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல்-மோகனூர் சாலையில், கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர் மற்றும் விவசாயிகளுக்கு கறவைமாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, மலட்டுதன்மை, நோய் தடுப்பு, சினைப்பருவம், ஒரு ஆண்டுக்கு ஒரு கன்று பெறுதல் முறை குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 18ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது.விருப்பமுள்ளவர்கள், வரும், 17ம் தேதிக்குள், 04286-266 345 என்ற தொலைபேசி அல்லது நேரில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொடர் மழையின் காரணமாக கருப்பு திராட்சை விலை உயர்வு

தர்மபுரி: தொடர் மழை காரணமாக, கருப்பு திராட்சை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், விலை உயர்ந்து வருகிறது. தமிழகத்தில், சில நாட்களுக்கு முன், கருப்பு திராட்சை வரத்து அதிகரித்திருந்தது. ஒரு கிலோ திராட்சை, 40 ரூபாய்க்கு விற்பனையானது. விலை குறைவாக இருந்ததாலும், ஊட்டச்சத்து அதிகமுள்ள பழமாக இருந்ததாலும், பொதுமக்கள் ஆர்வத்துடன் கருப்பு திராட்சை வாங்கி வந்தனர். தேனி, கம்பம், போடி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் இருந்து தர்மபுரி மாவட்டத்துக்கு திராட்சை வரத்தாகிறது. தற்போது, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காரணமாக, கருப்பு திராட்சை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், தர்மபுரி மாவட்டத்துக்கு விற்பனைக்கு வரும் கருப்பு திராட்சையின் அளவு கணிசமாக குறைந்துள்ளது. ஒரு மாதத்துக்கு முன், ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட, கருப்பு திராட்சை தற்போது, 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கருப்பு திராட்சை விலை அதிகரித்த போதும், திருமண விழா மற்றும் கோவில் விழா அதிகளவில் நடப்பதால், வழக்கம் போல் திராட்சை விற்பனை நடப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## கேசர்குளி பாசன விவசாயிகளுக்கு வேளாண் அறிவுரை

தர்மபுரி: கேசர்குளி அணை பாசன விவசாயிகள், பயிர் சாகுபடி செய்து, அதிக லாபம் பெறலாம் என, தர்மபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மோகன் அறிவுரை கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கேசர்குளி அணையின் மொத்த பாசனப் பரப்பு, 4,000 ஏக்கர்.

அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ள பாசன நீரை பயன்படுத்தி நெல், கரும்பு, வாழை மற்றும் தக்காளி, நிலக்கடலை ஆகிய பயிர்களை பயிரிடலாம். நெல் சாகுபடியை பொருத்தவரையில், அதிக மகசூல் பெற, புதிய தொழில்நுட்பமான திருந்திய நெல் சாகுபடியில் முக்கிய தொழில்நுட்பங்களான, 14 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். பயிருக்கு பயிர் மற்றும் வரிசைக்கு வரிசை, 22.5 செ.மீ., இடைவெளியுடன், சதுர நடவு முறையில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். கோனோ களைக்கருவி மூலம் களையெடுத்தல் போன்றவற்றை பின்பற்றுவதன் மூலம் நெல்லில் உயர்விளைச்சல் பெறலாம். மேலும், கரும்பு சாகுபடி செய்ய இது ஏற்ற பருவம். கரும்பு சாகுபடியில் நவீன தொழில் நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். இதன் மூலம், கரும்பில் அதிக மகசூல் பெறலாம். நீடித்த நவீன கரும்பு சாகுபடியில், ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைக்க வேண்டும். இளம் நாற்றுகளை ( 25-35 நாட்கள் ) எடுத்து நடவு செய்தல், 5துஇடைவெளியில் நடவு செய்தல், தேவையான அளவு மட்டும் பாய்ச்ச வேண்டும். இயற்கை சார்ந்த உரங்கள், பயிர்பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஊடுபயிர் சாகுபடி மூலம் மண்வளம் மற்றும் மகசூல் அதிகரித்தல் ஆகியவை நீடித்த நவீன கரும்பு சாகுபடியின் முக்கிய கோட்பாடுகளாகும். சரியான அளவு உரங்களை உபயோகிப்பதன் மூலம், பயிர்களுக்கு ஊட்டச்சத்து பராமரிப்பு சிறப்பாக அமைகிறது. காற்று மற்றும் சூரிய ஒளி அதிகளவு பயிர்களுக்கு கிடைப்பதனால், கரும்பில் சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது. மேலும், சாகுபடி செலவு குறைகிறது. விவசாயிகள் மேற்கண்ட முறைகளை கையாண்டு, சாகுபடி செய்யும் பட்சத்தில் ஏக்கருக்கு, 80 முதல், 100 டன் வரை மகசூல் பெற வாய்ப்புள்ளது. மேலும்,

பாலக்கோடு வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் மாரண்டஹள்ளி துணை விரிவாக்க மையங்களில் நெல் ஏ.டி.டீ., 39 ரக விதைகளும், நுண்ணூட்டச் சத்துக் கலவை, உயிர் உரங்கள், நிலக்கடலைக்கு தேவையான ஜிப்சம் போன்றவற்றை மானியத்தில் விவசாயிகள் பெற்று பயனடையலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விவசாய தொழிலாளர் சங்க கூட்டம்

ஈரோடு : அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், மாவட்ட தலைவர் துரைராஜ் தலைமையில் நடந்தது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், பணி செய்த தொழிலாளர்களுக்கு, அனைத்து யூனியன்களிலும், இரண்டு முதல், நான்கு மாதம் வரை சம்பளம் கொடுக்கப்படவில்லை.ஈரோடு யூனியன், மேட்டு நாசுவம்பட்டி பஞ்., எலவமலை, கூரபாளையம், கதிரம்பட்டி, மொடக்குறிச்சி யூனியன் மண்கரடு, சத்தியமங்கலம், ம.கொமராபாளையம், கொடுமுடி யூனியன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், இதுபோன்ற நிலை காணப் படுகிறது. எனவே, மாவட்டத்தில் அனைத்து யூனியன்களிலும் வேலை செய்த தொழிலாளர்களுக்கு நிலுவை சம்பளத்தை வழங்க வேண்டும். வாரந்தோறும் உரிய சம்பளத்தை வழங்க வேண்டும்.அதிகபட்சம், 15 நாட்களுக்குள் சம்பளம் வழங்க நடவடிக்கை வேண்டும், என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினர்.

## 'கக்குட்டா' ஒட்டுண்ணியால் காபி விவசாயிகள் கலக்கம்

பந்தலுார் : பந்தலுார் பகுதியில் காபி செடிகளை ஆக்கிரமிக்கும், ஒட்டுண்ணியால் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் பந்தலுார், கூடலுார் பகுதிகளில், காபி விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. வயநாடு மற்றும் கர்நாடக மாநில

காலநிலை இப்பகுதியில் நிலவி வருவதால், 'ரோபஸ்டா, அரபிக்கா' வகை காபி செடிகள் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. நடப்பாண்டு அதிகளவு பெய்த பருவமழையால், காபி செடிகளில் காய்கள் அதிகளவில் காய்த்துள்ளது. நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், காபி செடிகளின் மீது 'கக்குட்டா' என்ற தாவரவியல் பெயரை கொண்ட (எல்லோ பெராசிட்) மஞ்சள் நிற ஒட்டுண்ணி செடிகள் அதிகளவில் படர்ந்து காணப்படுகிறது. காபி செடிகளின் வளர்ச்சியை பாதிக்கும் இந்த ஒட்டுண்ணி, வளர்வதற்கு வேர் ஏதும் தேவையில்லை என்பதுடன், இதன் சிறு பாகத்தை செடிகளின் மீது படரவிட்டாலே, பற்றி வளரும் தன்மை கொண்டது. காபி செடிகளில் அதிகளவில் படர்ந்து காணப்படுவதால், காபி செடிகளின் வளர்ச்சி, விளைச்சலை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயி பால்ஜோஸ் கூறுகையில், “இந்த ஒட்டுண்ணி செடி படர்வதை கட்டுப்படுத்த, மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இதன் சிறு பாகங்கள் செடிகளில் பற்றி யிருந்தாலும், அவை மீண்டும் வளர்கிறது. இதனால் காபி விளைச்சல் பாதிக்கும்,” என்றார்.இந்த வினோத ஒட்டுண்ணி குறித்து ஆய்வு நடத்தி,இதன் பரவலை தடுக்க காபி வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## <u>பயிர் காப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு</u>

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்திட, வருகிற 15ந் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு, கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கலெக்டர் மதிவாணன் கூறியதாவது, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், பயிர்

காப்பீடு செய்திட, கடன் பெறாத விவசாயிகள் வரும், 15ம் தேதிக்குள்ளும், கடன் பெற்ற விவசாயிகள் வரும், 30ம் தேதிக்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும். வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள், ஏக்கர் ஒன்றுக்கு, 12 ஆயிரத்து, 800 ரூபாய்க்கு காப்பீடு செய்ய பிரிமியம் கட்டணமாக, 128 ரூபாய் செலுத்த வேண்டும். இதில் 50 சதவிகித மானியத்தினை, அரசு செலுத்தும். மேலும், கடன் பெறாத விவசாயிகள், 115 ரூபாய் பிரிமியம் கட்டணமாக செலுத்த வேண்டும். இவர்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 55 சதவிகித கட்டணத்தை, அரசு மான்ய கட்டணமாக செலுத்தப்படும். தவிர, கடன் பெறாத விவசாயிகள், ஏக்க்ர் ஒன்றுக்கு கூடுதலாக, 11 ஆயிரத்து, 200 ரூபா ய்க்கு காப்பீடு செய்ய, கூடுதல் பிரிமியம் கட்டணமாக, இரண்டு ஆயிரத்து, 688 ரூபாய் செலுத்த வேண்டும். விவசாயிகள் தங்கள் பிரிமிய கட்டண த்தை அருகில் உள்ள, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செலுத்தி, பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயணடையவும் என தெரிவித்தார்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

கீழக்கரை : திருப்புல்லாணி வட்டாரப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் நெற்பயிருக்கு அடுத்ததாக தென்னை சாகுபடி செய்துவருகிறார்கள். திருப்புல்லாணி வேளாண்மை விரிவாக்க மையத்தில் நெற்பயிருக்கான நுண்ணூட்டம் தேவையான அளவு இருப்பில் உள்ளது. இதை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் குப்பையுடன் கலந்து வயல்களில் இட வேண்டும். அதேபோல் தென்னை மரத்திற்கு நுண்ணூட்டம் 1 கிலோவுடன் மண்புழு உரத்தையும் இடவேண்டும் என உதவி இயக்குநர் கீதாஞ்சலி தெரிவித்தார்.

## 45 அடியை எட்டியது பிளவக்கல் அணை; ஆபத்தை கருதி நடுஇரவில் அணை திறப்பு

வத்திராயிருப்பு : மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த கனமழையை தொடர்ந்து பிளவக்கல் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. 45 அடியை தாண்டியதால் அணையின் ஆபத்து கருதி இரவோடு இரவாக அணை திறக்கப்பட்டது. தமிழகத்தில் பருவமழை தீவிரமடைந்து கொட்டித் தீர்த்ாலும் வத்திராயிருப்பு பகுதியில் மட்டும் போதிய மழை இல்லாமல் இருந்தது. தூறலும் சாரலுமாகவே மழை பெய்தது. இதனால் கண்மாய், கால்வாய்களுக்கு நீர்வரத்து இல்லை. மேற்குத்தொடர்ச்சி மலைகளை யொட்டிய பிளவக்கல் அணைகளுக்கும் நீர்வரத்து இல்லாமல் இருந்தது. கடந்த வாரம் அவ்வப்போது பெய்த மழையால் நீர்வரத்து ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் (திங்கள்) இரவு அணையை யொட்டிய மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் 3 மணி நேரத்திற்கும் மேல் கனமழை பெய்தது. இதனால் மலையடிவாரப்பகுதியான பேச்சிக்கேணியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பெரியாறு அணைக்கும் திடீரென அதிக நீர்வரத்து வந்தது. ஏற்கனவே இந்த அணை 42 அடியை எட்டிய நிலையில் அதிக நீர்வரத்து காரணமாக ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே 45அடியை எட்டியது. 48 அடி கொண்ட இந்த அணையின் முழு உயரத்திற்கும் தண்ணீரை தேக்குவது ஆபத்தானது என்பதால் 45 அடியை எட்டியதும் பாதுகாப்பு கருதி, அங்கு முகாமிட்டிருந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் இரவோடு இரவாக அணையை திறந்து நீரை வெளியேற்றினர். மேலும் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து உள்ளதால் அணைக்குவரும் நீரின் அளவை கணக்கிட்டு அதை அப்படியே வெளியேற்றி வருகின்றனர்.

* இதுபோல் 42 அடி கொண்ட கோவிலாறு அணையில் தற்போது 32 அடி நீர் உள்ளது. இங்கு வினாடிக்கு 108 கனஅடி வீதம் நீரவரத்து உள்ளது.

இங்கும் அதிகாரிகள் முகாமிட்டு நீர்மட்டத்தை கண்காணித்து வருகின்றனர்.

**887 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டம்**

சிவகங்கை : ""மாவட்டத்தில் வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடப்பாண்டு 887 பண்ணை குட்டைகள் அமைக்கப்படும்," என ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் குருநாதன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: கடந்த ஆண்டு மாவட்டத்தில் வேலை உறுதி திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகள் நிலங்களில் ரூ.71 லட்சம் செலவில் 113 பண்ணை குட்டைகளும், அரசு புறம்போக்கு நிலங்களில் ரூ.51 லட்சத்தில் 73 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு இத்திட்டத்தின் கீழ் 887 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.40 ஆயிரம் முதல் ரூ.1.50 லட்சம் வரை. பண்ணை குட்டைகள் அமைக்க விரும்புவோர், அந்தந்த ஒன்றிய அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம் என்றார்.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**திருவாரூர் மாவட்டத்தில் 125 மெ.டன் உளுந்து, பயறு விதைகள் தயார்**

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக 100 மெ.டன் உளுந்து விதை, 25மெ.டன் பயறு விதையும் தயார் நிலையில் உள்ளதாக கோவை விதை சான்று இணை இயக்குநர் பழனிசாமி தெரிவித்துள்ளார். திருவாரூர் பேருந்து நிலையம்

அருகேயுள்ள வேளாண்மை விதை சேமிப்பு கிடங்கை நேற்று கோவை விதைச் சான்று இணை இயக்குநர் பழனி சாமி ஆய்வு செய்தார். பின் னர் நிருபர்களிடம் அவர் பேசும்போது; திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் ஆடுதுறை 38, 39, 43, 45, 46 போன்ற விதை ரகங்கள் மற்றும் சாவித்திரி, பி.பி.டி, சொர்ணாசப் ஆகிய விதை ரகங்கள் என மொத் தம் 1000 மெ.டன் அளவில் வேளாண்மை விதை கிடங்கு மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதில் சொர் ணாசப் என்ற விதையானது வெள்ளத்தை தாங்கும் வகையில் ஒரிசா மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டில் உளுந்து, பயறு விதை ஜனவரி மாதம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக 100 மெ.டன் உளுந்து விதை, 25 மெ.டன் பயறு விதையும் தயாராக வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டில் 100 மெ.டன் அளவில் குறுவை விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டு குறுவை பட்டத்திற்காக இதுவரையில் ஏ.டி.டி 43 ரகவிதை 53 மெ.டன், ஏ.டி.டி 45 ரகவிதை 10 மெ.டன் விதை என மொத் தம் 63 மெ.டன் இதுவரை தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் சான்று பெற்ற விதையானது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வீரியம் இருக்கும் என்பதால், அதன் பின் புதிதாக சான்று பெற்ற விதையை விவசாயிகள் வாங்கி உபயோகிக்க வேண்டும். மேலும் மாநிலம் முழுவதும் ஒரு ஆண்டிற்கு மொத்தம் 1 லட்சத்து 10ஆயிரம் மெ.டன் சான்று பெற்ற விதைகள் தேவைப்படுகிறது. இவற்றில் 17 சதவீத அளவிற்கு மட்டுமே அரசின் விதை சான்று அலுவலகம் மூலம் உற்பத்தி செய்ய முடிகிறது. மீதமுள்ள 83 சதவீதம் தனியார் மூலம் ஈடு செய்யப் படுகிறது. இவ்வாறு தனியார் மூலம் விதைகள் ஈடுசெய்யப்பட்டு வந்தாலும் அவைகள் அனைத்தும் அரசின் சான்று பெற்ற பின்னரே விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும் வருங்காலங்களில் அரசின் சார்பில்

சான்று பெற்ற விதைகளை கூடுதலாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது விதை சான்று உதவி இயக்குநர் கல்யாணசுந்தரம் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>மழைநீரில் மூழ்கிய பயிர்களில் தழைச்சத்து குறைபாடு போக்கும் வழிமுறை</u>**

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டத்தில் மழைநீரில் மூழ்கிய பயிர்களில் தழைச்சத்து குறைபாட்டை போக்கும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. திருவாரூர் மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த பருவமழையால் நெற்பயிரில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. நீடாமங்கலம் வட்டாரத்தில் உள்ள ராயபுரம், காளாச்சேரி, ஆதனூர், பரப்பனாமேடு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் சோழன், வேளாண் உதவி இயக்குனர் இளஞ்செழியன், உதவி பேராசிரியர் ரமேஷ் ஆகியோர் ஆய்வு செய்தனர். அப்போது மயில்வாகணன் கூறுகையில், நீரில் மூழ்கிய பயிர்களில் தழைச்சத்து குறைப்பாட்டை போக்குவதற்கு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்து இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் காலை 17 கிலோ பொட்டர் உரத்தை கலந்து தெளிக்க வேண்டும். இலைவழி உரமாக 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ சிங்சல்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும் அல்லது 4 கிலோ டிஎபியை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் காலை வடித்து நீருடன் 2 கிலோ பொட்டர் உரத்தை சேர்த்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிநோய் தாக்குதலை கட்டுப்படுத்த தற்போது நிலவும் மந்தமான நிலையில் இலை சுருட்டுப்புழு

குருத்து ஈ மற்றும் ஆனைகொம்பன் ஈ பூச்சிகளின் தாக்குதல் தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது. இலை சுருட்டுப்புழு தாக்கப்பட்ட வயலில் இலைகள் நீளவாக்கில் சுருட்டப்பட்டு பட்டு போன்ற மெல்லிய இழைகளால் இணைந்து புழுக்கள் உள்ளிருந்து கொண்டு இலைகளை சுரண்டி உண்ணுவதால் இலைகளில் பச்சையம் சுரண்டப்பட்ட இடங்களில் வெள்ளை நிறப்பட்டையாக காணப்படும். இதை கட்டுப்படுத்த புரனோபாஸ் 400 மிலி அல்லது புளூபென்டியாமைடு 50 கிராம் அல்லது தயாமெத்தக்சாம் 40 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் தெளித்து அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 7 கிலோ மருந்தை 10 கிலோ மணலுடன் கலந்து கட்டுப்படுத்தலாம் என்றார்.

## <u>சிங்கம்புணரி பகுதியில் நெல் பயிருக்கு காப்பீடு</u>

சிங்கம்புணரி: சிங்கம்புணரி பகுதியில் உள்ள அனைத்து பிர்காக்களிலும் நடப்பு சம்பா பருவத்தில் பயிரிடப்பட்டும் நெல் பயிருக்கான பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் விவசாயிகள் அனைவரும் தாங்கள் பயிர் செய்துள்ள சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். காப்பீடு செய்வதற்கான கடைசி நாள் கடன் பெறாத விவசாயிகளுக்கு வரும் 15ம் தேதியும், கடன் பெறும் விவசாயிகளுக்கு இம்மாதம் 30ம் தேதி வரையும் செலுத்தலாம். பிரிமியத்தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். நெல்லிற்கு பிரிமியம் தொகை சிறு குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.115ம் இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.128ம் செலுத்த வேண்டும். இழப்பீட்டுதொகை ஏக்கருக்கு 12800 வழங்கப்படும்.என வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் தெரிவித்தார்.

## திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் 21ம்தேதி நடக்கிறது

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் வருகிற 21ம்தேதி நடைபெற உள்ளதாக கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நவம்பர் மாதத்திற்கான மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வருகிற 21ம் தேதி(வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் பொது கோரிக்கைகள் இருப்பின் அதன்விவரம் குறித்த மனுக்களை வருகிற 17ம் தேதிக்குள்(திங்கட்கிழமை) திருவண்ணாமலை கலெக்டருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். அதே போல கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்ப பெட்டிகளிலும் மனுக்களை போடலாம். சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து பதில் அளிக்கவும், தகுந்த நடவடிக்கை எடுக்கவும் மேலும் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட மனுக்கள் தொடர்பாக பதில் அளிக்கவும் உபயோகமாக இருக்கும். இந்த தகவலை கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## கூடுதல் விலை கிடைப்பதால் சில்லரை விற்பனையில் மரவள்ளி விவசாயிகள் ஆர்வம்

போச்சம்பள்ளி: கூடுதல் விலை கிடைப்பதால் போச்சம்பள்ளி பகுதி மரவள்ளி விவசாயிகள் சில்லரை விற்பனையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். உலக அளவில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது. மரவள்ளிக்கிழங்கு, மாவு பொருட்களாகவும் மற்றும் ஜவ்வரிசியாகவும் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாட்டில் ஒட்டுமொத்த மரவள்ளி கிழங்கு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு 64 சதவீதமாக உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சுற்று வட்டார பகுதியில் ஏராளமானோர் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இங்கிருந்து சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி, கிழங்கு மாவு ஆலைகளுக்கு இடைத்தரகர்கள் மூலமும், வியாபாரிகள் மூலமும் வாங்கிச்செல்லப்படுகிறது. கடந்த வாரம் திடீரென விலை சரிவடைந்தது. ஒரு டன் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. இதனால், கிழங்கு வெட்டுக்கூலி கூட கிடைக்காமல் விவசாயிகள் தவித்தனர். இந்நிலையில், சில விவசாயிகள் தங்களது நிலத்தில் விளைந்த மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்து சாலையோரங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் குவித்து வைத்து கிலோ கணக்கில் சில்லரையில் விற்பனை செய்து வருகின்றனர். கிலோ ரூ.20க்கு விற்பனை செய்கின்றனர். அந்த வழியாக செல்வோர் கிழங்கை பார்த்தவுடன் வாங்கிச் செல்கின்றனர். இரு மடங்கு லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ஐஓபி சார்பில் 7 நாள் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி17ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் கிராமிய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் 6 நாட்கள் நடத்தப்படும் காளான் வளர்ப்பு இலவச பயிற்சிக்கு வரும் 17ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை இந்தி யன் ஓவர்சீஸ் கிராமிய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் காளான் வளர்ப்பு பயிற்சி 6 நாட்கள் இலவசமாக அளிக்கப்பட உள்ளது. இதில் புதுக் கோட்டை கிராமப்புறத்தைச் சேர்ந்த படித்த வேலை இல்லாத இளைஞர்கள் கலந்து கொள் ளலாம். பயிற்சியில் தினசரி இலவச மதிய உணவு மற்றும் படிப்பதற்கான குறிப்பு புத்தகங்களுடன் தரமான பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இதில் 18 வயது முதல் 35 வயதிற்குள் உள்ள கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்கள் 3 பாஸ் போர்ட் சைஸ் புகைப்பட நகல்க ளோடு மாற்றுச்சான்றிதழ், வாக்காளர் அடை யாள அட்டை, குடும்ப அட்டை நகல்களையும் இணைத்து அவரவர் தம்முடைய செல்போன் எண்ணையும் குறிப்பிட்டு வரும் 17ம் தேதிக்கு முன்பாக நேரில் வந்து விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு நிலைய இயக் குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம், 15062, மேல நான்காம் வீதி, திலகர் திடல் ஆட்டோ ஸ்டாண்ட் எதிரில், புதுக் கோட்டை. (தொலை பேசி எண் 04322-225339, செல் போன் எண் 99947 37185) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இத்தகவலை புதுக் கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் கிராமிய வேலைவாய்ப்பு பயிற்சி நிலைய நிறுவன இயக்குநர் ரமேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## பயிர் காப்பீட்டுக்கு 15ம் தேதி கடைசி

தரங்கம்பாடி,: சம்பா தாளடி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15ம் தேதி கடைசி என்று வேளாண் அதிகாரி தெரிவித்து உள்ளார். இது குறித்து செம்பனார்கோயில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் கூறியிருப்பதாவது. சம்பா தாளடி பயிர்களுக்கு கடன் பெறாத விவசாயிகள் தேசிய வேளாண்மை காப் பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய நவம்பர் 15ம் தேதி கடைசி நாளாகும். காப்பீடு செய்ய தகுதி உள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.128 பிரிமியம் தொகை செலுத்தி காப்பீடு செய்து கொள்ள லாம்.

## புரோட்டினியா புழுக்களை அழிக்கும் வழிமுறைகள்

திருச்சுழி: திருச்சுழி பகுதியில் விவசாய பயிர்களில் அதிகளவில் உற்பத்தியாக நாசப்படுத்தி வரும் புரோட்டினியா புழுக்களை அழிப்பதற்கு வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். திருச்சுழி பகுதியிலுள்ள கத்தாளம்பட்டி, எம்.ரெட்டியபட்டி, மண்டபசாலை உள்ளிட்ட கிராமங்களில் 1000க்கும் மேற்பட்ட ஏக்கரில் பாசிப்பயிறு மற்றும் உளுந்தம்பயிறுகள் பயிரிடப்பட்டுள்ளன. பருவமழை காரணமாக நன்கு வளர்ந்து காணப்பட்ட பயிர்களில், தற்போது கலர் கலராக காணப்படும் புரோட்டினியா எனும் புழுக்கள் தாக்கி வருகின்றன. இப்புழுக்களின் தாக்குதலால் இலையின் மேல்புறம் வட்ட வட்டமாக காணப்படும். விவசாயிகளை பாதித்து வரும் இந்த புழுக்களை அழிக்க வேளாண் அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர். அதன்படி, ஒரு ஏக்கருக்கு மோனோகு« ராட்டோபாஸ் 250மி. மற்றும் வேப்ப எண்ணெய் 250 மி.லி. அல்லது குளோரிபைரிபாஸ் 250 மி. மற்றும் வேப்ப எண்ணெய் 250 மி.லி. சேர்த்து காலை அல்லது மாலை நேரங்களில் பயிர்களில் தெளிக்க

வேண்டும். இதன் மூலம் புழுக்களை கட்டுப்படுத்திட முடியும். இத்தகவலை எம்.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியார் அம்மாள் தெரிவித்துள்ளார்.

## <u>கதிர்நாவாய் பூச்சி தாக்குதல் நெற்பயிரை காப்பது எப்படி? விவசாயிகளுக்கு யோசனை</u>

அரியலூர், : சோழ மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜாஜோஸ்லின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: அரியலூர் மாவட்டத்தில் 28 ஆயிரம் ஹெக் டேர் பரப்பளவில் விவசாயிகள் சம்பா நெல் சாகுபடிசெய்து வருகின்றனர். நெற்பயிரில் அதிகளவில் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. ஆரம்ப நிலையிலேயே பயிர் பராமரிப்பு நிலையை பின்பற்றினால், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். அதிகம் நீர் தேங்குவதால் அழுகல் நோய் ஏற்பட வாய்புள்ளதால், நடவு வயலில் வடிகால் வசதி களை நன்கு அமைத்தல் வேண்டும். குறிப்பிட்ட உர அள விற்கு மேல் பயிர்க்கு உரம் அளிக்கக் கூடாது. சம்பா நெல்லில் ஒரு ஏக்கருக்கு 48 கிலோ தழைச்சத்து, 24 கிலோ மணிச்சத்து, சாம்பல் சத்து 24 கிலோ இது அதிகரித்தால் பூச்சிகளின் தாக் குதல் அதிகமாவதற்கு வாய்புள்ளது. இவைகளுடன் உயிர் உரமாக அசோஸ்பைரில்லம் 4 பாக்கெட் (800 கிராம்), பாஸ்பேக்டீரியா 4 பாக்கெட் இடுவதன் மூலம் 25 சதவீதம் வரை ரசாயபீ உரத்தை குறைக்கலாம் (தழைச்சத்து மற்றும் மணிச்சத்து). மேலுரமாக இடும் உரத்துடன், வேப்பம் புண்ணாக்கு (5 கிலோ உரத்திற்கு 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற அள வில்) கலந்து இடுவதால், உரம் சீரான முறையில் பயிர்களுக்கு கிடைப்பதுடன் வீணாவதையும் குறைக்கலாம். மேலும் நட்ட 15ம் நாளிலும்

ஒரு உரச்சாக்கில் 8 கிலோ வேப்பம் புண் ணாக்கு எடுத்துக்கொண்டு வயலுக்கு நீர் செல்லும் முகப்பில் வைத்து நீர் பாய்ச்ச வேண்டும். இதனால் பயிருக்கு பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் ஏற்படுவதுடன் பயிரும் செழிப்பாக வளரும். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ மக்கிய கோழி எச்சம் மற்றும் 25 கிலோ வேப்பம் புண்ணாக்கு நன்கு கலந்து, நட்ட 25 நாளிலும், 50 நாளி லும் நன்கு துஃவி விட்ட பிறகு 3 நாட்கள் கழித்து நீர் விட வேண்டும். இதனால் பூச்சி மற்றும் நோய் தென் பாடு குறைந்து பயிர் செழிப் பாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கும். பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த நட்ட 15 நாட்கள் மற்றும் 45 நாட் களில் ஒரு ஏக்கருக்கு வேப்பங்கொட்டை சாறு கரை சல் 5 சதவீதம் முற்றம் சூடோமோனஸ் 400 கிராம், சோப்பு கரைசல், ஒட்டுத்திரவம் 0.1 சதவீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். பூச்சி மற்றும் நோய் தென்பாடு பொருளாதார சேத நிலைக்கு இருக்குமேயானால், ஒரு ஏக்கருக்கு புரபனோபாஸ் (0.2%) 400 மிலி மற்றும் கார்பண்டாசிம் 200 கிராம், 200 லிட்டர் நீரில் கலந்து, கைத்தெளிபானால் தெளித்து கட்டுப்படுத்தலாம். எலிகளை கட்டுப்படுத்த, பயிர் நட்ட ஒரு ஏக்கருக்கு 15 பறவைகள் இறக்கைகள் ஆங்காங்கே டி வடிவ குச்சி யால் நட்டு (சுமார் 3 அடி உயரத்தில்) இருக்க வேண் டும். பாக்டீரியா இலை கருகல் நோயை கட்டுப்படுத்த, பசுஞ்சாண கரைசல் (ஏக்கருக்கு 10 கிலோ பசுஞ்சாணம்) 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். கதிர்நாவாய் பூச்சி மற்றும் இலை உறை அழுகல் நோயை, பூண்டுச்சாறு 3 சதவீதம் கலந்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் முலம், சம்பா நெற்பயிரில் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். மேலும் தகவல் பெற, சோழமாதேவி கிரீடு வேளாண் மைய அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

## வேளாண் காப்பீடு திட்டத்தில் பயன்பெற 15ம் தேதி கடைசி சேதுபாவாசத்திரம் பகுதி விவசாயிகளுக்கு அழைப்பு

சேதுபாவாசத்திரம், : தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் சேதுபாவாசத்திரம் பகுதி விவசாயிகள் சேர வரும் 15ம் தேதி கடைசி நாளாகும். சேதுபாவாசத்திரம் வட்டார உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி செய் துள்ள கடன்பெறாத விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் வரும் 15ம் தேதிக்குள் சேர வேண்டும். சம்பா, தாளடி பயிர் 1 ஏக்கருக்கு மொத்த காப்பீட்டு மதிப்பு ரூ.12,800 ஆகும். கடன்பெறாத சிறு, குறு விவசாயிகள் இதற்காக செலுத்த வேண்டிய பிரிமிய தொகை 55 சதவீத மானியம் போக ஏக்கருக்கு ரூ.115.20 செலுத்த வேண்டும். கடன்பெறாத இதர விவசாயிகள் பிரிமிய தொகை 50 சதவீதம் மானி யம் போக ஏக்கருக்கு ரூ.128 செலுத்த வேண்டும். கூடுதல் மதிப்பீடாக ஏக்கருக்கு ரூ.11,200 பெற கடன் பெறாத விவசாயிகள் மானியமின்றி செலுத்த வேண்டிய பிரிமியம் ஏக்கருக்கு ரூ.2,688 ஆகும். இக்கூடுதல் பிரிமியத்தொகையை கடன் பெறாத விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்த லாம். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் பிரிமியம் செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான் றிதழ் பெற்று முன்மொழிவு படிவத்துடன் செலுத்த வேண் டும். பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பயிர் கடன் பெறும் வங்கியிலேயே இத்திட்டத்தில் வங்கி வாயிலாக சேர்க்கப்படுவர். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண்மைத்துறை யிலோ அல்லது கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியிலோ கேட்டு பெறலாம். மாநில அரசின் விவசாயத்துறையால் பயிர் அறு வடை காலத்தில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு நடப்பு பருவத்தின் சராசரி மகசூலைவிட கடந்த 5 ஆண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ

அந்த விகிதாச்சாரப்படி அந்த வட்டாரத்தில் உள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யும் விவசாயிகள் தங்களது நெற்பயிரை புயல், வெள் ளம், பூச்சி மற்றும் நோயால் ஏற்படும் மகசூல் இழப்பை முழுவதுமாக ஈடு செய்ய லாம். எனவே சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அனை வரும் இத்திட்டத்தை முழுமையாக பயன்படுத்தி பயன் பெறலாம்.

**<u>கடன் பெறா நெல் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய நவ.15 கடைசி</u>**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கடன் பெறா நெல் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 15 கடைசி நாளாகும். ராமநாதபுரம் மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டிற்கான நெல் பயிர் காப்பீடு திட்டம் (இன்சூரன்ஸ்) அறிவிக்கப்பட்டுள்ளது. மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் நெல் பயிருக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவாய் இழப்பு ஏற்படும்போது, பயிர் காப்பீடு வழங்கப்படுகிறது. மண்டபம் வட்டாரத்தில் நெல்லுக்கான காப்பீடு திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. நெற்பயிருக்கான காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ.12 ஆயிரத்து 800 ஆகும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.115ம், இதர விவசாயிகள் ரூ. 128ம் பிரீமியமாக செலுத்த வேண்டும். கடன் பெறும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 128 செலுத்த வேண்டும். பிரீமியத் தொகையை அருகிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், வணிக வங்கிகளிலும் செலுத்தி பயன்பெறலாம். கடன் பெறாத விவசாயிகள் நவம்பர் 15ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும். கடன் பெறும் விவசாயிகள் நவம்பர் 30ம் தேதி க்குள் தொகையை செலு த்த வேண்டும். நவம்பர் 15ம் தேதி வரை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் காப்பீடு செய்ய சிறப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நெல்

விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<u>நெட்டப்பாக்கம் பகுதிகளில் மரவள்ளி அறுவடை பணி தொடக்கம்</u>**

நெட்டப்பாக்கம், : நெட்டப்பாக்கம் அடுத்துள்ள ஏம்பலம், கல்மண்டபம் ஆகிய பகுதியில் மரவள்ளி அறுவடை நடைபெற்று வருகின்றது. இப்பகுதியில் சுமார் 30 ஏக்கருக்கு மேல் மரவள்ளி பயிர் செய்யப்பட்டுள்ளது. மரவள்ளி நன்கு வளர்ந்து அறுவடை காலம் நெருங்கி விட்டதால் விவசாயிகள் மரவள்ளியை அறுவடை செய்து வருகின்றனர். மரவள்ளியை சேலம், ஆத்தூர் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஸ்டார்ச், ஜவ்வரிசி, மைதா போன்ற பொருட்களுக்கு மரவள்ளி கிழங்கு பயன்படுத்தப்படுகிறது. மரவள்ளியை வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தொடர்ந்து 69 நாட்களாக நிரம்பி வழியும் பரம்பிக்குளம் அணை விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



தொடர்ந்து 69 நாட்களாக பரம்பிக்குளம் அணை நிரம்பி வழிவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பரம்பிக்குளம் அணை

பரம்பிக்குளம்- ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய அணையாக பரம்பிக்குளம் அணை விளங்கி வருகிறது. கேரள மாநிலத்தில் அமைந் துள்ள பரம்பிக்குளம் அணை தமிழக பொதுப் பணித்துறை யின் கட்டுப்பாட்டில் உள் ளது. சோலையார் அணையில் இருந்து பரம்பிக் குளம் அணைக்கு தண்ணீர் வருகிறது. மேலும் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் இருந்தும் தண்ணீர் வருகிறது. இந்த நிலையில் வால்பாறை மற்றும் பரம்பிக்குளம் பகுதியில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய் தது. இந்த மழையின் காரணமாக கடந்த ஆகஸ்டு மாதம் சோலையார் அணை நிரம்பியது. விவசாயிகள் மகிழ்ச்சி தொடர்ந்து பரம்பிக் குளம் அணைக்கு தண் ணீர் வரத்து அதிகரித்தது. 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணை படிப்படியாக நிரம்ப தொடங்கியது.இந்த நிலையில் சோலையார் அணையில் இருந்து பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் அதிகமாக வந்ததால் கடந்த செப்டம்பர் மாதம் 3-ந்தேதி பரம்பிக்குளம் அணை தனது முழு கொள்ள ளவான 72 அடியை எட்டியது. இதைத்தொடர்ந்து அணையின் பாதுகாப்பு கருதி 3 மதகுகள் வழியாக கேரளாவுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. தொடர்ந்து 69 நாட்களாக அணை நிரம்பி ரம்மியமாக காட்சி அளிக்கிறது. இதனால் பரம்பிக்குளம் வரும் சுற்றுலா பயணிகள் அணையின் அழகை கண்டு ரசித்து செல்கின்றனர். மேலும் பி.ஏ.பி. விவசாயி களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீர் வரத்து இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது:- கடந்த செப்டம்பர் மாதம் 3-ந்தேதி பரம்பிக்குளம் அணை அதன் முழுகொள்ளளவை எட்டியது. அதன்பிறகு வடகிழக்கு பருவமழையும் பரம்பிக் குளம், சோலையார் பகுதியில் போதிய அளவு பெய்ததால் அணை தொடர்ந்து 69 நாட்களாக நிரம்பி காணப்படுகிறது. தற்போது அணைக்கு சோலையார் அணையில் இருந்து வினாடிக்கு 400 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதேபோன்று பி.ஏ.பி.

பாசனத்திற்காக வினாடிக்கு 1000 கன அடி தண்ணீர் காண்டூர் கால்வாயில் திறந்துவிடபட்டு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**<u>பனிக்காலம் தொடங்கியதால் பூக்களின் விலை ‘கிடு,கிடு’ உயர்வு</u>**

**<u>மல்லிகைப்பூ 1 கிலோ ரூ.500-ஐ தாண்டியது</u>**



பனிக்காலம் தொடங்கியதால் கிருஷ் ணகிரி மாவட்டத்தில் பூக்களின் விலை ‘கிடு,கிடு’ வென உயர்ந்துள்ளது. நேற்றைய நில வரப்படி மல்லிகைப்பூ 1 கிலோ ரூ.500-ஐ தாண்டியது. வண்ண, வண்ண பூக்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லிகை, முல்லை, சாமந்தி, ஜாதிப்பூ, ரோஜா போன்ற பல்வேறு மலர்கள் விளைவிக்கப்படுகின்றன. குறிப்பாக ஓசூர் மற்றும் சூளகிரி பகுதியில் விளையும் ரோஜாக்கள் உலகத்தரம் வாய்ந்தவை. இதேபோல் காவேரிப்பட்டணம், திம்மா புரம், பெரியமுத்தூர், சந்தாபுரம், வேலம்பட்டி என தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் உள்ள பல்வேறு கிராமங்களில் குண்டு மல்லி, ஜாதி மல்லி, காக்கடம்பூ ஆகிய மணக்கும் மல்லிகைப் பூக்கள் 1500 ஏக்கர் பரப்பளவில் விளைகின்றன. பனிக்காலம்

மல்லிகைப் பூவை பொறுத்தவரை மழைக் காலத்தில் விளைச்சல் குறைவாகவும், வெயில் காலத்தில் விளைச்சல் அதிகமாகவும் இருக் கும். கோடை காலமான ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில் இந்த பகுதியில் இருந்து நாள் ஒன்றுக்கு 50 டன் மல்லிகைப் பூ கர்நாடகா மாநிலம் பெங்களூருக்கு அனுப்பப்படும். ஆனால் பனிக்காலம் தொடங்கி விட்டால் நிலைமை நேர்மாறாக மாறிவிடும். பனியின் தாக்கத்தால் மல்லிகை மொட்டுகள் கருகி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும். கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் கடந்த 15 நாட் களுக்கும் மேலாக பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. சற்று முன்னதாகவே பனிக்காலம் தொடங்கி உள்ளது. விலை ‘கிடு,கிடு’ உயர்வு இதனால் குண்டு மல்லி, ஜாதி மல்லி, முல்லைப்பூ, காக்கடம்பூ மற்றும் கனகாம்பரம் போன்ற அனைத்து வகை பூக்களின் வரத்தும் மிகவும் குறைவாகவே உள்ளது. விளைச்சல் குறைவானதால் விலை ‘கிடு,கிடு’வென உயரத் தொடங்கி உள்ளது. மேலும் தற்போது சுபமுகூர்த்த தினங்கள் அதிகமாக உள்ளதால் மார்க்கெட்டில் பூக்களின் தேவையும் அதிகரித்து உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று காலை நிலவரப்படி குண்டு மல்லி 1 கிலோ ரூ.500-ஐ தாண்டி விற்றது. இதேபோல் கனகாம்பரம் ரூ.800-க்கும், ஜாதி மல்லி ரூ.300-க்கும், முல்லைப்பூ ரூ.450-க்கும் விற்றது. உள்ளூர் மார்க்கெட்டில் 1 முழம் மல்லிகைப் பூ அதிகபட்சமாக ரூ.50 வரை விற்றது. தொடர்ந்து பனிக்காலம் வருவதால் பூக்களின் விலை மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## கடந்த 24 நாட்களாக மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 56 அடியாக நீடிக்கிறது



தேனி, மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் கடந்த 24 நாட்களாக 56 அடிக்கு குறையாமல் சீராக காணப்படுகிறது. மஞ்சளாறு அணை

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி அருகே மஞ்சளாறு அணை அமைந்து உள்ளது. இந்த அணையின் மொத்த உயரம் 57 அடி ஆகும். இந்த அணை கடந்த மாதம் 18-ந்தேதி இரவில் நிரம்பியது. இதனால் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. 19-ந்தேதி காலையில் அணையின் நீர்மட்டம் 56.80 அடியாக இருந்தது. அதன் பிறகு 24-ந்தேதி அணைக்கு நீர்வரத்து

அதிக அளவில் இருந்ததால் அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் 26-ந்தேதி வினாடிக்கு 3 ஆயிரத்து 960 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்டத்தில் மஞ்சளாறு தண்ணீர் செல்லும் பகுதிகளில் மக்கள் வசிக்கும் ஊர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. சீராக உள்ள நீர்மட்டம் அதன்பிறகு அணைக்கு நீர்வரத்து ஏற்படும் அளவுக்கு ஏற்ப தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இருப்பினும் அணை நிரம்பிய போது இருந்த அளவிலேயே தண்ணீர் இருந்தது. தொடர்ந்து 20 நாட்களாக அணை நீர்மட்டம் 56.80 அடியாகவே நீடித்தது. அதன்பிறகு அணைக்கு நீர்வரத்து குறைந்ததால் திறந்து விடும் தண்ணீரின் அளவு கடந்த 3 நாட்களுக்கு முன்பு குறைக்கப்பட்டது. இதனால் தொடர்ந்து 24 நாட்களாக அணையின் நீர்மட்டம் 56 அடியில் இருந்து குறையாமல் சீராக உள்ளது. நேற்று முன்தினம் காலை அணையின் நீர்மட்டம் 56.90 அடியாக காணப்பட்டது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 89 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 89 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையில் மொத்தம் 474.76 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. நீர்மட்டம் தொடர்ந்து சீராக உள்ளதால் அணையை நம்பியுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அதே மகிழ்ச்சியுடன் அணையின் பாசன பகுதிகளில் பயிர் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

**<u>வேளாண்மை குழு ஆலோசகர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்</u>**

திருப்பூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்தானகிருஷ்ணன் வெளியிட்டுள்ள ஒரு செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:–திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் (2014–15) வேளாண்மை துறையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம்

சோளம், ராகி, மக்காசோளம் போன்ற தானிய பயிர்களின் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தை மாவட்ட அளவில் ஒருங்கிணைந்து செயல்படுத்த திட்ட மேலாண்மை குழு அமைக்கப்பட உள்ளது. இந்த குழுவுக்கு வேளாண்மையில் அடிப்படை பட்டத்துடன், முதுகலைப்பட்டம் பெற்று, பயிர் சாகுபடியில் 10 ஆண்டுகள் களப்பணியாற்றிய அனுபவமும், ஊக்குவிப்பு திறன் மற்றும் குழு தலைமை பண்பும் கொண்ட ஒருவர் தற்காலிக அடிப்படையில் ஆலோசகராக நியமிக்கப்பட உள்ளார். தகுதியான நபர்கள் தங்களது முழு விபரத்துடன் திருப்பூர் வேளாண்மை இணை இயக்குனருக்கு வருகிற 25–ந்தேதிக்குள் (செவ்வாய்க்கிழமை) விண்ணப்பிக்குமாறு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறு அந்த அறிக்கையில் சந்தானகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.